**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.655/2021**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கிளிண்டன் ரஞ்சித் அமிர்தராஜ் | **Caste** | : | |
| **Father's Name** | : | தம்புராஜ் | **Calling** | : | ரியல் எஸ்டேட் |
| **Village** | : | வேடப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | **32/2026** |
| | | | **Dated** | : | **06.02.2026** |

**06.02.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரி ஆஜர்.**

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வேடப்பட்டியில் உள்ள வீடு சொந்தவீடு என்றால் சரிதான். 14.02.2021ம் தேதி எனது வீட்டில் தான் வைத்து எதிரி ரொக்கமாக பணம் பெற்றார் என்றால் சரிதான். எதிரியும் வேடப்பட்டியில் தான் குடியிருக்கிறார் என்றால் சரிதான். எதிரி எதற்காக கடன் பெற்றார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் பைனான்ஸ் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை ரியல் எஸ்டேட் செய்கிறேன். நான் வருமான வரி ஏதும் கட்டவில்லை என்றால் சரிதான். நான் கடனாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். கைமாத்தாக தான் கொடுத்தேன். நான் எதிரிக்கு கொடுத்த ரொக்க தொகை எவ்வாறு வந்தது என்றால் வீடு விற்று வந்த பணமாகும். மேற்படி வீடை விற்றதற்கு ரசீது அல்லது ஆவணம் ஏதும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி 19.04.2021ம் தேதி அன்று எதிரியுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் எனது நண்பர் கார்த்திக் மட்டும் இருந்தார். உறவினர் யாரும் இல்லை. கார்த்திக் எனக்கும் எதிரிக்கும்

பழக்கம். நான் எதிரி கொடுத்த காசோலையை வங்கியில் செலுத்திய போது Drawers Signature incomplete / illegible /differs என்று வந்தது என்றால் சரிதான். அவ்வாறு மறுக்கப்பட்டு வந்தபோது காசோலையில் உள்ள எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் அவர்தான் என் முன்னால் கையொப்பம் செய்தார் ஆனால் அவர் கையொப்பத்தை மாற்றி போட்டுவிட்டார்.

கடந்த 14.02.2021ம் தேதி ஆஜர் எதிரி எனது வீட்டிற்கு வந்து கடன் ஏதும் பெறவில்லை என்றாலும் அதற்கு ஆதரவாக காசோலை ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி அரசாங்க ஊழியர் என்பதால் வேறு ஒரு நபரிடம் காலாவதியான பூர்த்திசெய்யப்படாத காசோலையை பெற்று நானே கையொப்பம் செய்து வசூலுக்கு தாக்கல் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக எதிரி மாவட்ட குற்றப்பரிவு மற்றும் தெற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி சட்டப்படி கடன் தொகையை செலுத்துவதற்கு கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.06 10:58:12 +0530

Judicial Magistrate No.II
Dindigul.